அசல் வழக்கு எண். 62/2022

நாள் : 05.02.2026

பி.வா.சா. : 2

பெயர் : ராஜேந்திரன்

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1985 முதல் 2005 வரை நான் தாவா வீட்டில் குடியிருந்தேன். அது நாட்டு ஓட்டு வீடு. அந்த வாடகையை பேபியம்மாள் என்பவரிடம் கொடுத்தேன். அந்த வீடு பேபியம்மாளுக்கு சொந்தமான வீடு என்றால் சரிதான். அதற்கு எதாவது ஆவணம் பார்த்தேனா என்றால் அவர் தான் என்னை குடிவைத்தார். ஆவணங்களை பார்க்கவில்லை. நான் குடியிருந்தகாலத்தில் மின் கட்டணம் நான் செலுத்தவில்லை வாடகையுடன் சேர்த்து கொடுத்துவிடுவேன். அந்த வீட்டின் கதவிலக்கம் 11 A. நான் குடியிருந்த வீட்டிற்கு பக்கத்துவீடு மேற்கு புறமாக இருந்த RCC வீடு. அந்த வீட்டிற்கு 1989க்கு பிறகு மின் இணைப்பு இல்லை என்று சீர்காழி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது நான் குடியிருந்தவரை மின் இணைப்பு இருந்தது. அந்த வீட்டிற்கு பின்புறம் கிணறும் தோட்டமும் இருந்தது. நான் அந்த வீட்டில் எந்த காலத்திலும் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.